## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண்.7/2017

2025–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12–ம் நாள் புதன்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி P.ரங்கேஸ்வரி.,B.Sc.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, (முழு கூடுதல் பொறுப்பு) அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 12.03.2025 | தகப்பனார் பெயர்: | ரெங்கசாமி |
| பெயர்: | ரெங்ககிரி<br>(PW- 1 Chief ) | தாலுக்கா: | மயிலாடுதுறை |
| கிராமம்: | ஸ்டேட் பேங்க் காலனி | சமயம்: | |
| சாதி: | | வயது : | 72/2025 |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை : 12.03.2025**

நான் இவ்வழக்கின் 1–ம் வாதி தரப்பு சாட்சியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

26.04.2004–ம் தேதியில் எனக்கு இன்பசேகர் எழுதிக்கொடுத்த பத்திரத்தின் அசல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 03.09.2013–ம் தேதியில் நில அளவை சாசன பட்டாவின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 19.08.2011–ம் தேதியில் வாதி பெயரில் வழங்கப்பட்ட சிட்டா மற்றும் அடங்கல் உண்மை நகல் தாக்கல் செய்கிறனே் **அது வா.சா.ஆ.3 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.** 19.08.2011–ம் தேதியில் தாவா சொத்திற்கு எனது பெயரில் செலுத்திய கிஸ்தி ரசீதின் அசல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.4 குறியீடு செய்யப்படுறிது.** 24.06.2008–ம் தேதியில் தாவா சொத்திற்கு எனது பெயரில் செலுத்திய கிஸ்தி ரசீதின் அசல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.5 குறியீடு செய்யப்படுறிது**. 06.03.2007–ம் தேதியில் தாவா சொத்திற்கு எனது பெயரில் செலுத்திய கிஸ்தி ரசீதின் அசல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.6 குறியீடு செய்யப்படுறிது.** 11.10.2012–ம் தேதியில் திருவெண்காடு காவல் நிலையத்தில் வாதி பெயரில் கொடுக்கப்பட்ட மனு ரசீதின் அசல் தாக்கல்செய்கிறேன் **அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 15.11.2015–ம் தேதியில் திருவெண்காடு காவல் நிலையத்தில் வாதி பெயரில் கொடுக்கப்பட்ட மனு ரசீதின் அசல் தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (மேற்படி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு ஆப்சேணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.